நகரங்களில், அதுவும் மாவட்டத் தலைநகராக இருக்கக்கூடிய பகுதிகளில் உடனடியாக கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

223—

மகளிர் கலைக் கல்லூரி

***17836—திரு. மு. ஜெகன் மூர்த்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வைத்திணான்குப்பத்தில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

கே.வி. குப்பம் தொகுதி அமைந்துள்ள வேலூர் மாவட்டத்தில் 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 3 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 4 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேலும், வேலூர் மாவட்டம், சேர்க்காடு பகுதியில் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கல்லூரியை sanction *செய்திருக்கிறார்கள். ஆகவே, இப்போது உறுப்பினர் கோரியுள்ள கல்லூரியைத் துவங்கும் நோக்கம் எதுவும் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கூட்டத்தொடரில்கூட கே.வி. குப்பம் தொகுதிக்கு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்று*

2022 மே 5]

கேட்டிருந்தேன். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல அங்கே இருக்கின்ற கல்லூரிகள் இருபாலரும் படிக்கின்ற கல்லூரிகளாக இருக்கின்றன. போக்குவரத்து வசதிகள்கூட இல்லாமல் இருக்கின்ற பல கிராமங்களிலிருந்து வருகின்ற மாணவிகளை, இருபாலரும் படிக்கின்ற கல்லூரிகளுக்கு அனுப்பாமல், அவர்கள் படிக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, வீட்டிலேயே இருக்கட்டும் என்று சொல்கின்ற சூழ்நிலை அங்கே இருக்கிறது. அதனால் அவர்களுடைய கல்வி பாதிக்கப்படுகிறது. அவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கை கேள்விக்குறியாகின்றது. ஆகவே, பெண்களுக்கென்று தனியாக ஒரு கல்லூரியை கே.வி. குப்பம் தொகுதியில் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அமைச்சர் கேட்டுக்கொண்டபடி அந்தக் கல்லூரிக்கான இடம் அங்கே இருக்கிறது என்பதையும் தெரிவித்து, மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலை மறுபரிசீலனை செய்து, கே.வி. குப்பம் தொகுதியில் பெண்கள் கலைக் கல்லூரி அமைக்கப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.வி. குப்பம் தொகுதி, குடியாத்தத்திலிருந்து 9 கி.மீட்டர் தொலைவில்தான் இருக்கிறது. அங்கே ஒரு* co-education *கல்லூரி இருக்கிறது. காட்பாடியில் கல்லூரி இருக்கிறது. அருகருகில் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது, அரசுக் கல்லூரிகளே இல்லாத தொகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரியும் இருக்கிறது. ஆகவே, இதைப் பொறுத்தவரையில், நானும் குடியாத்தம் பகுதியில் இருந்தவன் என்பதால் எனக்கு நன்றாகத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இன்று காலையில் சொல்லிக்கொண்டிருந்தார்கள். நான் காட்பாடியிலிருந்து குடியாத்தம் போகும்போது கே.வி. குப்பம் பகுதி வழியாகத்தான் போக வேண்டும். நான் குடியாத்தத்தில் உள்ள கல்லூரியில் பணியாற்றியவன். அந்தப் பகுதி மக்கள் எல்லோரும் அங்கேயே படிக்கிறார்கள்.* Co-education *கல்லூரி பிரமாதமாக இயங்குகிறது.*

[2022 மே 5

அதில் ஒன்றும் தவறில்லை. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் co-education கூடாது; பெண்களுக்குத் தனியாகக் கல்லூரி வேண்டும் என்கிறீர்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் கேள்வி கேட்கும்போது அவர் என்ன சொன்னாரென்றால், தனியாகக் கல்லூரி இருக்கக்கூடாது; Co-education அங்கே வேண்டுமென்று அவர் சொன்னார். அதுபோன்ற பிரச்சினைகளெல்லாம் இருக்கின்றன. அதனால் இப்போதெல்லாம் பெண்கள் co-education என்றெல்லாம் பார்ப்பதில்லை. எந்தக் கல்லூரியாக இருந்தாலும் சென்று படிக்கிறார்கள். ஆகவே, அங்கே தனியாக பெண்கள் கல்லூரி அமைப்பதற்கான அவசியம் ஏற்படவில்லை.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.*

திரு. மு. ஜெகன் மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கின்ற விளக்கம், உண்மையாக இருந்தாலும், தொகுதி மக்களுக்கு அது போதுமானதாக இல்லை. பெண்கள் கல்லூரி வேண்டுமென்பதிலே மக்கள் உறுதியாக இருக்கிறார்கள். அதற்காகப் பல்வேறுகட்டப் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். இப்போதுகூட அப்பகுதி மக்கள் இங்கே வந்திருக்கிறார்கள். எப்படியாவது மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே வலியுறுத்தி பெண்கள் கல்லூரியைக் கொண்டு வருவதற்கு கண்டிப்பாக ஆவன செய்ய வேண்டுமென்று என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் நேரடியாக மனுவாகக்கூடக் கொடுத்திருக்கின்றேன். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயும் நான் இதுகுறித்துப் பேசியிருக்கின்றேன். ஆகவே, மறுபரிசீலனை செய்து பெண்கள் கலைக் கல்லூரியை கண்டிப்பாக கே.வி. குப்பம் தொகுதிக்குத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் சொன்ன அந்தக் கல்லூரிகள்கூட குடியாத்தத்தில் இருக்கின்றன, வேலூரிலே இருக்கின்றன. ஆனால், கே.வி. குப்பம் தொகுதியில் இல்லை என்பதை மீண்டும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆகவே, கண்டிப்பாக கே.வி. குப்பம் தொகுதிக்கு பெண்கள் கலைக் கல்லூரியை உருவாக்கித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொண்டு, அமர்கின்றேன்.*

2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியிலே ஓர் அரசுக் கலைக் கல்லூரி இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற குடியாத்தம் தொகுதியிலேயும் கல்லூரி இருக்கிறது. உங்களுக்கு 9 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறதென்று சொன்னேன். உங்கள் தொகுதியான கே.வி. குப்பத்திலும் ஓர் அரசுக் கலைக் கல்லூரி இருக்கிறது. அதுமட்டுமல்ல; இங்கு 1,678 பேர் என்பது மொத்த அரசுக் கலைக் கல்லூரிகளில் சேர்க்கை எண்ணிக்கை. ஆனால் சேர்ந்திருப்பவர்கள் 1,570 பேர்தான். ஆக, காலியிடங்களே இருக்கின்றன. முதலில் அதை நிரப்புவதற்கு உங்களிடம் வந்திருக்கிறார்களென்று சொன்னீர்களே, அவர்களிடம் சொல்லி அனுப்பி அந்தக் கல்லூரியில் போய்ச் சேருங்கள் என்று சொல்லுங்கள். கண்டிப்பாக வருங்காலங்களில் நிதிநிலைக்கேற்ப அதற்கான ஏற்பாடுகளைச் செய்வோம். தொகுதியில் எல்லோரும் கேட்கிறார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. அதனால்தான் முதலில் இருந்தே சொல்லிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு முடிவெடுத்து, அரசுக் கல்லூரிகளே இல்லாத தொகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து அறிவிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இப்போது அறிவித்திருக்கிறார். சில தொகுதிகள் இன்னும் இருக்கின்றன. அந்த தொகுதிகளுக்கெல்லாம் வருங்காலங்களிலே முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் கொடுக்கப்படும். நீங்களும் உங்கள் தொகுதியில் பெண்கள் கல்லூரி வேண்டுமென்று கேட்கும் கோரிக்கையிலே எந்தத் தவறும் கிடையாது. ஒரு கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் செலவாகிறது. வருங்காலங்களில் நிதிநிலைக்கேற்ப, அந்தப் பகுதி மக்களின் தேவைக்கேற்ப உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்பதை இவ்வளவு அழகாகச் சொன்ன ஒரே மந்திரி இவர்தான்.*

[2022 மே 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அரக்கோணம் அரசுக் கலைக் கல்லூரியில் சுமார் 1,500 ஏழையெளிய மாணவர்கள் பட்டப்படிப்பு பயின்று வருகின்றார்கள். அதிலே, 148 மாணவர்கள் முதுகலைப் பட்டப்படிப்பு படிக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து இடைநிற்றல் இல்லாமல் கல்வி கற்றிட* M.Phil., Ph.D. *வகுப்புகள் தொடங்கப்பட வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறார்கள். அங்கே தகுதியான பேராசிரியர்களும் இருக்கிறார்கள். இது மிகவும்* simple*-ஆன கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும் கல்வியாண்டிலே* M.Phil., Ph.D. *வகுப்புகள் தொடங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்தான் இந்தப் பதிலைச் சொல்லச் சொன்னவர். குடியாத்தத்தில் இருக்கிறது, காட்பாடியில் இருக்கிறது என்று சொல்லச் சொன்னவரே அவர்தான். அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர். சிறப்பாக நன்றாக பதில் சொல்லியிருக்கிறேன் என்று அவர் என்னை வாழ்த்தியிருக்கிறார். அதற்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரும்பாலான கோரிக்கைகள் புதிய கல்லூரிகள் வேண்டும்,* additional courses *வேண்டுமென்று நீங்கள் மட்டுமல்ல, எல்லோருமே அதிகமாகக் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு 10 கல்லூரிகளில்* Ph.D. *ஆரம்பிக்கப்படுமென்று அறிவித்திருக்கிறோம். அங்கே தகுதியான ஆசிரியர்கள் இருக்கிறபோது, தகுதியான இடங்களும் இருக்கிறபோது நிச்சயமாக அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

2022 மே 5]

முற்பகல் 10–30

திரு. க. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய காலத்தில் மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்பட வேண்டும் என்பது நடைமுறைப்படுத்தப்பட்டது. இன்றைக்குத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நம்முடைய முத்தமிழறிஞர் அவர்கள் வழியில் ஆட்சி நடத்தும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு தொகுதிக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் குறிப்பிட்டதைப்போல, அரசுக் கல்லூரிகளே இல்லாத ஒவ்வொரு தொகுதிக்கும், குறிப்பாக, மதுராந்தகம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியும் சுருக்கமாக, பதிலும் சுருக்கமாக இருந்தால், கூடுதலாக இரண்டு உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்புக் கொடுக்கலாம்.

திரு. க. சுந்தர்: சென்னையிலிருந்து மதுராந்தகம் 80 கி.மீ. தூரத்திலும், செய்யூர் 100 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. ஆகவே, அங்கே உள்ளவர்களெல்லாம் சென்னைக்கு வந்துதான் படிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, மதுராந்தகம், செய்யூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். கல்லூரிகள் இல்லாத தொகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்த வருடம் பத்து கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள். வருங்காலங்களிலே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.

[2022 மே 5

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலே படிக்கின்ற கல்லூரி மாணவ, மாணவிகள் குடும்ப சூழ்நிலைகளின் காரணமாக இடையிலே நின்று விடுகின்றனர். கல்விக் கட்டணம் கட்ட முடியாமல் போய்விடுகின்றது. அதனால், அவர்கள் கல்லூரிக் கட்டணம் செலுத்தினால்தான் அவர்களுடைய certificate-ஐக் கொடுப்போம் என்று சொல்கின்றனர். ஒரு சில பெண்கள் திருமணமாகி வெளியே சென்றுவிடுகின்றனர். அவர்கள் வேலைக்குச் செல்வதற்காக, பதிவு செய்வதற்காக அந்த certificate-ஐக் கேட்கும்போது, இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்குண்டான கட்டணத்தைக் கட்டினால்தான், நாங்கள் certificate-ஐக் கொடுப்போம் என்று சொல்கின்றனர். அவர்களால் கட்டணம் செலுத்த இயலாத காரணத்தினால்தான், அவர்கள் வெளியே செல்கின்றனர். அதனால், அரசு அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்து, அதுபோன்று ஒரு சூழ்நிலையில் இருக்கின்ற மாணவ, மாணவிகளுக்கு certificate-ஐக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தனியார் பள்ளிகளைச் சொன்னாரா, தனியார் கல்லூரிகளைச் சொன்னாரா என்பது தெரியவில்லை. தனியார் கல்லூரிகள் மற்றும் தனியார் பள்ளிகளிலெல்லாம் fees வாங்கி விட்டுத்தான், அங்கு வந்து படிக்க வைக்கிறார்கள். நடுவில் பணம் கட்டவில்லையென்றால், அதை வசூலிப்பதற்காக அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகள் இது. அவர்கள் அதை செலுத்தினால்தான், கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அந்த மாதிரி, பணத்தை பாதிக்குப் பாதி செலுத்தி, certificate-ஐ வாங்கிச் செல்ல வேண்டும். நாங்களும், கூடுமான வரையில், அந்தமாதிரி இடையில் செல்கின்ற மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை வசூலிக்கக்கூடாது என்று ஏற்கெனவே instructions கொடுத்திருக்கிறோம். அது, தனியார் கல்லூரிகள், private institutions-ஐப் பொறுத்திருக்கிறது. ஆகவே, உங்களுடைய கோரிக்கை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்; தனியார் கல்லூரிகளுக்கு இதுகுறித்து அறிவுறுத்தப்படும்.

2022 மே 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

224—

வட்டாட்சியர் அலுவலகம்

***8189—திரு. க.நா. விஜயகுமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் (வடக்கு) தொகுதிக்கென்று தனியாக வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் (வடக்கு) வட்டத்திற்கான வட்டாட்சியர் அலுவலகம், பொதுமக்கள் எளிதில் வந்து செல்லக்கூடிய வகையில், போக்குவரத்து வசதி மிகுந்த நகரின் மையப் பகுதியில்தான் தற்போது அமைந்துள்ளது. எனவே, தற்போதைய வட்டாட்சியர் அலுவலகத்தினை புதிய இடத்தில் அமைத்திட வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*

திரு. க.நா. விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் (வடக்கு) தொகுதியில் சுமார் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். அந்தத் தொகுதி 10 ஊராட்சிகளையும், 29 வார்டுகளையும் உள்ளடக்கிய தொகுதியாகும். வெளி மாவட்ட, வெளி மாநில தொழிலாளர்கள் பனியன் கம்பெனிகளில் வேலை செய்து வருகின்றனர். தற்போது, அவினாசி வருவாய் வட்டத்தில் திருப்பூர் (வடக்கு) தொகுதியில் எட்டு கிராம ஊராட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. இவை*